








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 14.11.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்
- பொருளாதார நிகழ்வுகள்











# தமிழக நிகழ்வுகள்

- சென்னை மாநகர குடிநீர் வாரியமானது, குடியிருப்புப் பகுதிகளுக்கு வழங்கப்படும் குடிநீரை வணிகப் பயன்பாடுகளுக்கு திசை திருப்பப்படுவதைத் தவிரப்பதற்காக **‘ஒற்றை முறை கடவுச்சொல்’ (OTP – One Time Password)** முறைமையை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - **‘குடிதண்ணீருக்கு அழைக்க’** என்றும் **‘கழிவு’நீர் சேமிக்கும் தொட்டி சுத்தம் செய்ய அழைக்க’** என்றும் இந்த ஒற்றை முறை கடவுச் சொல் முறைமையை வாடிக்கையாளர்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளது.

# இந்திய நிகழ்வுகள்

- **தனியார் நிறுவனங்களின்** மூலம் **சில்லறை வர்த்தக மேலாண்மை** மற்றும் **புதிய கிளைகள் தொடங்குவதற்கான வாய்ப்புகளுக்காக** எஸ்.சி. (SC – Scheduled Caste) மற்றும் எஸ்.டி (ST – Scheduled Tribe) சமூகத்தில் உள்ள இளைஞர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக **கர்நாடக** சமூக நலத்துறையானது **“சம்ருத்தி” என்ற திட்டத்தை** அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இது சிறிய நகரங்களில் உள்ள பொருளாதார மற்றும் சமூக ரீதியிலான அடிமட்ட நிலையிலுள்ள இளைஞர்களுக்கான **800 கோடி ரூபாய்** அளவிலான தொழில் முனைவோர் திறன் மேம்பாட்டு திட்டமாகும்.
  - இத்திட்டத்தின் மூலம் **2021** ஆம் ஆண்டில் **1000** தொழில் முனைவோர்களை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

- **ஒடிசா மாநில அரசானது 2018 ஆம் ஆண்டின் விண்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திக்** கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கொள்கையின் நோக்கம் விண்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களை ஊக்குவிப்பதன் மூலம் **தொழில்மயமாக்கலின் செயல்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதாகும்.**

- ஒடிசா அரசானது விவசாயிகளால் நீர்ப்பாசனத்தின் சூரிய சக்தியை பயன்படுத்துவதை ஊக்குவிக்க **“சவுரா ஜல்நிதி திட்டம்”** என்பதைத் தொடங்கியுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் விவசாயிகள் **90 சதவிகித மானியமும் 15000 சூரிய ஒளி இயந்திரங்களும்** வழங்கப்படுகிறது.

- குறிப்பு:
  - இத்திடத்திற்கு பயனாளிகளுக்கான தகுதிகள் : சரியான விவசாயி **அடையாள அட்டை** மற்றும் குறைந்த பட்சம் **0.5 ஏக்கர் விவசாய நிலத்தையும்** கொண்டிருக்க வேண்டும்.

## உலக நிகழ்வுகள்

- **இந்தியா மற்றும் மலாவி** ஆகிய நாடுகள் குற்றவாளிகளை ஒப்படைக்கும் உடன்படிக்கை, அமைதிப் பணிகளுக்காக அணு ஆற்றல் துறையில் ஒத்துழைப்பு, இராஜ தந்திர மற்றும் அலுவல் ரீதியான கடவுச் சீட்டுகளுக்கான விசா நடைமுறையில் தளர்வு ஆகிய **3 ஒப்பந்தங்களில்** கையெழுத்திட்டுள்ளன.
  - இந்தியக் குடியரசுத் தலைவர் வெங்கையா நாயுடுவின் மலாவி பயணத்தின் போது இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டன.

## விளையாட்டு நிகழ்வுகள்

- சீனாவின் ஜினானில் நடைபெற்ற **ஆசிய ஸ்னூக்கர்** போட்டியான இறுதி ஆட்டத்தில் சீனாவின் ஜீ ரெட்டியை 6-1 என்ற செட் கணக்கில் வீழ்த்தி **ஆசிய ஸ்னூக்கர் பட்டத்தை வென்ற முதலாவது இந்திய வீரராக பங்கஜ் அத்வானி** உருவெடுத்துள்ளார்
  - பங்கஜ் அத்வானி **19 முறை உலக சாம்பியன்ஷிப் பட்டம்** பெற்றுள்ளார்.

## நியமனங்கள்

- நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது **(ACC – Appointment Committee of the Cabinet)** மூன்று மூத்த இந்திய வருவாய்த் துறை அதிகாரிகளான **“K. டாஷ், அகிலேஷ் ரஞ்சன் மற்றும் நீனாகுமார்”** ஆகியோரை நேர்முக வரிகளுக்கான மத்திய வாரியத்தின் **(CBDT – Central Board of Direct Taxes)** உறுப்பினர்களாக நியமித்துள்ளது.

## பொருளாதார நிகழ்வுகள்

- இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியமானது **(SEBI – Securities and Exchange Board of India)** தமிழ்நாட்டில் மலிவான வீடுகள் பிரிவில் முதலீடுகளை ஈர்ப்பதற்கான நிதியத்தை துவங்குவதற்கு தமிழக அரசிற்கு அனுமதி அளித்துள்ளது.
    - இது தொடர்பாக தமிழ்நாடு அரசானது, **'தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதியம்'** என்ற மாற்று முதலீட்டு நிதியத்தின் கீழ் பிரிவு **1** என்பதை ஏற்படுத்தியுள்ளது.
    - இது **"இந்தியாவில் வர்த்தகம்"** மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்கான புதுமையான மற்றும் மாற்று நிதி என்ற நிகழ்வில் அனுசரிக்கப்படுகிறது

We Shine Academy™